**ஜூன் – 25**

**"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்."**

**- கொலோ 4 : 2.**

விசுவாசத்தின் ஒவ்வொரு சோதனையும், பொறுமையின் ஒவ்வொரு சோதனையும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற ஒத்தாசைக்காக ஜெபிக்க சந்தர்பமாகிறது. நமது சொந்த பலவீனத்தின் படிப்பினை நம்மில் ஆழமாகப்பதியவும் அதனால் அதைப்போலொத்த அடுத்த சோதனையில் நாம் உடனடியாக வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக்கிற "சகாயஞ்செய்யும் கிருபைக்காக" கேட்கவும், அதைப் பற்றிக்கொள்ளவும் தக்கதாக, ஜெபம் பெறுவதின் சம்பந்தமாக உள்ள ஒவ்வொரு தோல்வியும், மன்னிப்புக்காகவும், தெய்வீக ஆசிர்வாதத்திற்காகவும் ஜெபிக்க ஒரு சந்தர்ப்பமுமாகிறது. நாம் அகந்தையில்லாதவர்களாகவும், இறுமாப்படையாதவர்களாகவும் இருந்து, ஆனால், எதிராளியிடமிருந்து வரும் அடுத்த தாக்குதலுக்காகத் தாழ்மையும் விழிப்புள்ளவர்களுமாயிருக்க, நாம் தன்மேல் (சுயநலத்தின் மேல்) அடைகிற ஒவ்வொரு வெற்றியும், ஜெபத்திற்காக ஏற்படுகிற ஒரு சந்தர்பமாகிறது. சத்தியத்திற்காகச் செய்கிற ஒவ்வொரு வேலையும், நன்றி தெரிவிக்கும் ஜெபத்திற்காக ஒரு தக்க சமயமாகிறது. ஏனென்றால், அது அந்தப்பெரிய இராஜாவுக்கு ஊழியம் செய்யக் கிடைத்திருக்கிற சிலாக்கியமாகும். ஒருவேளை அவர் நிமித்தமாக சிறிதளவு பாடநுபவித்திருக்கலாம். ஊழியத்திற்காக மேலும் சந்தர்ப்பங்களைப் பெறுவதற்காகவும் அந்தச் சந்தர்ப்பங்களை ஞானமாய் உபயோகிக்கக் கிருபைக்காகவும் ஜெபிக்க ஒரு காரணமுமாகலாம்.

**- Z ’96, 163 (R 2004).**

நல்ல காரியங்களுக்காக தேவனிடத்திற்குச் செல்லுகிற சொன்ன, அல்லது சொல்லப்படாத இருதயத்தின் உண்மையான விருப்பமே ஜெபம். நம்முடைய விண்ணப்பங்களுக்கு ஒரு பதிலைப்பெற நாம் விரும்பினால், கர்த்தருக்குப் பிரியமானதாய் இருக்கத்தக்கதாக, கேட்கப்பட்ட காரியங்கள், கேட்பதற்கு ஏவுகிற உத்தேசம், எவ்விதமாக அவைகள் ஏறெடுக்கப்படுகின்றன ஆகிய இவைகள் எல்லாவற்றின் சம்பந்தமாகத் தொடர்ந்து கவனமாயிருந்து கொண்டு, ஜெபத்தை விடாது செய்ய வேண்டும். **-P ’36, 79.**

**ஒத்து வாக்கியங்கள் :-**ஆதி 32:24-32; 1நாளா 16:11,35; சங் 145:18; லூக் 11:1-13; 18:1-7; எபே 5:4,19,20; 6:18,19; பிலி 4:6; 1தெச 5:17,18; 1தீமோ 2:1,8; எபி 4:16; யாக் 5:16; யூதா 20; வெளி 5:8; 8:3,4; மத் 26:41; அப் 20:28-31; 1பேது 1:13,17;4:7; கொலோ 3:15-17.

**கோபுர வாசிப்பு : Z ’15, 154 (R 5690)**

**வினாக்கள் :** இந்த வாரம் விழிப்பும் நன்றியறிதலும் உள்ள ஜெபவாரமாக இருந்ததா? எவ்வாறு அவ்விதம் இருந்தது? அதன் முடிவு என்ன?